" கண்ணைக் காப்பது இமை "
" மண்ணைக் காப்பது மழை "

**மதுரை மாநகராட்சி**

# மாமன்றக் கூட்டம்

**2012-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 30-ம் நாள் திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு**

அறிஞர் அண்ணா மாளிகை
பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
மாமன்ற கூட்ட நிகழ்ச்சி நிரல்

---

கூட்டம் நடைபெற நிர்ணயிக்கப்பட்ட நாளிற்கு ஆறு நாட்களுக்கு முன் அலுவலக நேரங்களில் கூட்டம் தொடர்பான ஏடுகள் உறுப்பினர்களின் பார்வைக்கு மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகை பெரியார் கூடத்தில் வைக்கப்பெறும்.

*-*-*-*-*-*

**திருக்குறள் :** ***" ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின் எழுமையும் ஏமாப் புடைத்து "***

**பொருள் :** ஒரு பிறவில் ஒருவன் ஆமைபோல் ஐம்பொறிகளையும் அடக்கி வாழக் கற்றுக் கொண்டால் அந்த அடக்கம் அவன் எடுக்கும் ஏழு பிறவிக்கும் பாதுகாவலாக வந்து அமையும்.

**ஆ) தீண்டாமை ஒழிக்க மேற்கொள்ளும்**

## உறுதிமொழி

இந்திய அரசியலமைப்பின்பால். இடைவிடாத. உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய நான். நமது அரசியலமைப்பின்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர் மீதும் தெரிந்தோ, தெரியாமலோ, சமூக வேற்றுமையை மனம், வாக்கு, செயல் என்று எந்த வகையிலும் கடைப்பிடிக்கமாட்டேன் என்று, இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும். உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.

(அரசாணை (நிலை) எண்.245 செய்தி மற்றும் சுற்றுலாத்துறை நாள் 13.11.98)

**1) சி.டபிள்யு.2/ 39280/2011**

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல்–1 விதி 19(2)ன்படி 21.12.2011-ம் தேதி நடைபெற்ற வரிவிதிப்பு மற்றும் நிதிக் குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு : வரிவிதிப்பு மற்றும் நிதிக் குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**மாமன்றத்தீர்மானம் எண்.104**
**பதிவு செய்யப்பட்டது**

**2) சி.டபிள்யு.2/ 40475/2011**

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல்–1 விதி 19(2)–ன்படி **04.01.2012**-ம் தேதி நடைபெற்ற சுகாதாரகுழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு : சுகாதாரகுழுக் கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**மாமன்றத்தீர்மானம் எண்.105**
**பதிவு செய்யப்பட்டது**

**3) சி.டபிள்யு.2/ 000307/2012**

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல்–1 விதி 19(2)–ன்படி 09.01.2012-ம் தேதி நடைபெற்ற நகரமைப்புக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு : நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது

**மாமன்றத்தீர்மானம் எண்.106**
**பதிவு செய்யப்பட்டது**

**4) B1/000474/2012**

மதுரை மாநகராட்சியில் பணிபுரியும் அனைத்து நிரந்தர மற்றும் தற்காலிக பணியாளர்களுக்கு 2010-2011 ஆம் ஆண்டிற்கு மிகை ஊதியம் வழங்க அரசு ஆணை எண்.1 நிதி(படிகள்)த்துறை நாள்:02.01.2012–ல் உத்தரவிடப்பட்டுள்ளது. அரசு ஆணையில் 2010-2011-ஆம் நிதியாண்டுக்காக, திங்களொன்றுக்கு 30 நாட்கள் என்ற அடிப்படையில், 30 நாட்கள் ஊதியத்திற்கு இணையான தொகையை மிகை ஊதியமாக வழங்கப்பட வேண்டும். மிகை ஊதியம் 31.03.2011–ஆம் நாளான்று உள்ள ஊதியத்தின் அடிப்படையில் கணக்கிடப்படவேண்டும். தற்போது முறையான காலமுறைச்சம்பளம் பெறும் 'இ' மற்றும் 'ஈ' பிரிவைச்சேர்ந்த (C&D Group) சார்ந்த அனைத்த நிரந்தர/தற்காலிக பணியாளர்களுக்கு மாதாந்திர ஊதியம் ரூ.3000/- என்பதை உச்சவரம்பாக கொண்டு, மிகை ஊதியத்தொகை கணக்கிடப்பட வேண்டும். 'அ ' மற்றும் ' ஆ ' பிரிவைச் (A&B Group) சார்ந்த பணியாளர்களுக்கு இந்த ஆண்டும் சிறப்பு மிகை ஊதியமாக ரூ.1000 வழங்க அரசு ஆணையிடப்பட்டுள்ளது.

மேற்படி அரசு ஆணையின்படி மாநகராட்சியில் பணிபுரியும் அனைத்து பணியாளர்களுக்கு சிறப்பு மிகை ஊதியம் வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**குறிப்பு** : அரசு ஆணையின்படி சிறப்பு மிகை ஊதியம் மாநகராட்சி பணியாளர்களுக்கு வழங்குவதால் கூடுதல் செலவினம் ரூ.**120.00**, லட்சம் ஆகும்.

**மாமன்றத்தீர்மானம் எண்.107**
**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**5) பி11 /000867 /12**

மதுரை மாநகராட்சியில் பணியாற்றி ஓய்வு பெற்று ஓய்வூதியம் பெற்று வரும் ஓய்வூதியதாரர்களுக்கும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கும் 2010-2011–ம் ஆண்டிற்கான பொங்கல் போனஸ் ரூ.500 வழங்க அரசாணை எண்.2, நாள் : 02.01.2012–ல் உத்தரவிடப்பட்டு வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட அரசாணைக்கு பின்னேற்பு கோரி மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**குறிப்பு** : 2010-2011 ஆண்டிற்குரிய பொங்கல் போனஸ் வழங்கிய செலவு தொகை ரூ.**16,23,000**/- ஆகும்.

**மாமன்றத்தீர்மானம் எண்.108**
**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**6) H5/ 00700 / 12**

மதுரை மாநகராட்சிக்கு உட்பட்ட 100 வார்டுகளில் நிகழும் பிறப்பு / இறப்பு பதிவுகளை உடனுக்குடன் பதிவு செய்து பிறப்பு / இறப்பு சான்றிதழ்கள் பொது மக்களுக்கு வழங்க ஏதுவாக மற்றும் அதன் தொடர்பான பணிகளுக்காக வார்டுகளில் பணிபுரிந்து வரும் ஒவ்வொரு சுகாதார ஆய்வாளர்களுக்கும் ஒவ்வொரு கணினி (பிரிண்டர், டேபிள், சேர் உட்பட) வழங்கவும், பொது சுகாதாரப்பிரிவு மைய அலுவலகத்தில் பணிபுரியும் புள்ளி விபர உதவியாளர் அவர்களின் பணிக்களுக்காகவும் மற்றும் பதிவறையின் பிறப்பு / இறப்பு பதிவுகளுக்காகவும் மொத்தம் 30 கணினிகள் கொள்முதல் செய்ய (பிரிண்டர், டேபிள், சேர் உட்பட) மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.109**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**7) H3/001462/12**

மதுரை மாநகராட்சி பொது சுகாதாரப்பிரிவு மாநகராட்சி எல்லைகள் 72 வார்டுகளிலிருந்து 100 வார்டுகளாக விரிவுபடுத்தப்பட்டுள்ளதால் மாநகராட்சியின் அனைத்து பகுதிகளிலும் கொசு ஒழிப்பு பணி திறம்பட செய்திட மண்டலம் ஒன்றிற்கு தலா ஒரு புகைபரப்பும் வண்டி (ஆட்டோ) வீதம் நான்கு மண்டலத்திற்கும் கொசு ஒழிப்பு பணி செய்திட நான்கு புகைபரப்பும் வண்டிகள் (ஆட்டோ) கொள்முதல் செய்வதற்கும், புகைபரப்பும் வண்டிகள் கொள்முதல் செய்வதற்கு தேவையான தொகையை மாநகராட்சியின் பொது நிதியிலிருந்து வழங்குவதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.110**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**8) H1/16947/11**

மதுரை மாநகராட்சி அனுப்பானடி மகப்பேறுமனை அருகிலுள்ள சிந்தாமணி, சின்ன அனுப்பானடி, ஐராவதநல்லூர் பகுதிகள் புதிதாக மதுரை மாநகராட்சியுடன் இணைத்து மாநகராட்சி விரிவாக்கப்பட்டுள்ளதால் அப்பகுதி மக்கள் பயன்பெறும் விதமாக அனுப்பானடி மகப்பேறுமனையில் புதிதாக ஸ்கேன் மையம் தொடங்குவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.111**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**9) H1/38085/11**

மதுரை மாநகராட்சியின் கீழ் உள்ள பழங்காநத்தம் மகப்பேறுமனையினை பொது மக்களின் நலன் கருதி மகப்பேறுமனையினை மேம்படுத்தப்பட்டு, அறுவை சிகிச்சை கூடம் உட்பட அனைத்து வசதிகளுடன் தோற்றுவிப்பதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.112**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**10) H1/000753/12**

மதுரை மாநகராட்சியின் கீழ் இயங்கி வரும் மகப்பேறுமனைகளில் பொது மக்களுக்கு பார்க்கப்படும் பிரசவங்களுக்கும், வெளிநோயாளிகளின் மருத்துவம் பார்ப்பதற்கும் தேவைப்படும் மருந்துகள் வாங்குவதற்கு ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கும் ரூ.5,00,000/- ஒதுக்கீடு செய்து வழங்குவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.113**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**11) H1/000754/12**

மதுரை மாநகராட்சியின் கீழ் இயங்கி வரும் 17 நலவாழ்வு மையங்களில் பொது மக்களுக்கு மருத்துவம் பார்ப்பதற்கு தேவைப்படும் மருந்துகள் வாங்குவதற்கு ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கும் ரூ.5,00,000/- ஒதுக்கீடு செய்து வழங்குவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.114**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**12) HF2/1463/12**

சாலை விபத்துகள் மற்றும் பேறுகாலம் தொடர்பாக அவசர சிகிட்சைகள் பெற அரசு மருத்துவமனைகள், மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் போதிய அளவு இருந்தாலும், அவசர சிகிட்சைக்கு உரிய நேரத்தில் நோயாளிகளை அனுமதித்திட போதிய அளவு ஆம்புலன்ஸ் வாகன வசதிகள் மதுரை மாநகராட்சியில் இல்லை. இதனை கருத்திற் கொண்டு அவசரப்பணிகளை திறம்பட செய்வதற்கு, மதுரை மாநகராட்சியில் ஒரு மண்டலத்திற்கு தலா ஒரு ஆம்புலன்ஸ்கள் வாங்குவதற்கு அரசின் ஒப்புதலுக்கும், நிதி உதவி கோரியும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.115**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**13) ம.ந.2/26887/11**

மதுரை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட ஆர்.சி.டயோஸிஸ், K.புதூர், மதுரைக்கு உட்பட்ட (சர்வே ஆவணங்களின்படி – மதுரை கத்தோலிக் மறை மாநிலம் – மதுரை) சர்வே எண்.3-க்கு (பழைய சர்வே எண்.2727) இடத்தில் கிழக்குப் பக்கத்தில் கல்லறை அமைத்துக் கொள்ள அனுமதி கோரியதின் பேரில் மதுரை மாநகராட்சி செயற்பொறியாளர் (திட்டம்) மற்றும் சம்பந்தப்பட்ட வார்டு சுகாதார ஆய்வாளர் ஆகியோர் இடத்தினை நேராய்வு செய்து பொது சுகாதார விதிகளின்படி (SFNo.2727(ம) 2728) சர்வே எண்.3 மற்றும் 4–ல் குறிப்பிட்ட இடத்தில் 300 அடிக்குள் எந்தவிதமான வழிபாட்டு தலங்களோ, குடியிருப்புகளோ இல்லை என அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதன் அடிப்படையில், ஆர்.சி. டயோஸிஸ்–க்கு சொந்தமான பேராயர் வளாகத்திலுள்ள இடத்தில் ஆர்.சி.டயோஸிஸில் பணியாற்றி இறந்த குருக்கள் அடக்கம் செய்ய மதுரை மாநகாட்சி சட்டம் 1997 (பிரிவு எண்.402-ன்படி) அனுமதி வழங்கவும், மேற்படி சட்டம் பிரிவு 404 உட்பிரிவு (2) மற்றும் (4) ல் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளின் அடிப்படையிலும் கல்லறை அமைத்துக் கொள்ள அனுமதி வழங்குவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.116**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**14) மந2/28717/2011**

அரசாணை நிலை எண் : 220 நாள் : 28.09.2010–ன்படி மதுரை மாநகராட்சியுடன் அருகாமையிலுள்ள 3 நகராட்சிகள், 3 பேரூராட்சிகள் மற்றும் 11 ஊராட்சிகள் ஆகியவைகள் இணைக்கப்பட்டு ஒருங்கிணைந்த 100 வார்டுகள் கொண்ட மாநகராட்சியாக தற்போது செயல்பட்டு வருகிறது. ஏற்கனவே 72 வார்டுகளுக்கு ஒரு நாய் பிடி வாகனம் மட்டும் பயன்படுத்தப்பட்டு வந்த நிலையில், தற்பொழுது அந்த வாகனமும் அடிக்கடி பழுதாகி, பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது . எனவே புதிய 100 வார்டுகளுக்கு நாய்களை பிடித்து அறுவை சிகிச்சை செய்வதற்கும் கருத்தடை மற்றும் தடுப்பூசி போடுவதற்கும் புதியதாக 2 வாகனங்கள் வாங்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.117**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**15) WS1/35287/2011**

மதுரை மாநகராட்சி பொது சுகாதாரப்பிரிவு டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின் கீழ் நல்வாழ்வு மையங்களில் பயனாளிகளிடமிருந்து பெறப்படும் மனுக்களை வலைத்தளம் மூலமாக (online) கணினியில் பதிவு செய்வதற்கும் பதிவு எண் வழங்குவதற்கும் பயனாளிகளுக்கு காசோலை வழங்குவதற்கும் நல்வாழ்வு மையங்கள் மற்றும் மைய சுகாதாரப்பிரிவின் உபயோகத்திற்காக மேலும் 10 கணினிகள் வலைதளம் (online) இணைப்புடன் கொள்முதல் செய்வதற்கும் (பிரிண்டர், டேபிள், சேர் உட்பட) இதற்கான நிதியினை மாநகராட்சியின் பொது நிதியிலிருந்து வழங்குவதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.118**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**16) B30/19482/2008**

மதுரை மாநகராட்சி தெருவிளக்கு பராமரிப்பு பணியில் குறித்த நேரத்தில் மாலையில் தெருவிளக்குகளை ஒளிரவிடவும். காலையில் குறித்த நேரத்தில் தெருவிளக்குகளை அணைக்கவும். பொது மக்களின் நலன் கருதி ஒரே நேரத்தில் ஒளிர விடவும் அணைக்கவும் பணியாளர்கள் மூலம் செய்ய இயலாது. ஏனெனில், ஒரு பணியாளர் மூலம் 45 சுவிட்சுகளை ON/OFF செய்வதால் அரைமணி நேரத்திற்கு முன்பாக ON செய்ய ஆரம்பிக்க வேண்டியுள்ளது. இதனால் மின்துய்ப்பு உபயோகம் அதிகமாதுடன், மாநகராட்சி பணம் விரயமாகிறது. இதனை கருத்தில் கொண்டு தமிழ்நாட்டிலேயே முதன் முறையாக மண்டலம் 2 (வடக்கு மண்டலத்தில்) மின் சேமிப்பு கருவி [Energy Saver (BOT Method) GSM Technology] மூலம் பயன்படுத்தி தானியங்கி சுவிட்சுகள் செயல்படுத்தப்பட்டு சராசரியாக 30 விழுக்காடு மின்சேமிப்பு மிச்சப்படுத்தப்படுகிறது. மேலும் மண்டலம் 3, மண்டலம் 4 (கிழக்கு மண்டலம் மற்றும் தெற்கு மண்டலம்) ஆகிய மண்டலங்களிலும் இதே முறையில் மின்சேமிப்பு செய்யப்பட்டு வருகிறது.

மண்டலம் 2,3,4 ஆகிய மண்டலங்களில் அமலில் உள்ள GSM Technology முறையை மண்டலம் 1–லும் (மேற்கு மண்டலம்) Energy Saver System (BOT) முறையில் தனியார் நிறுவனம் மூலம் நிறைவேற்றலாம். இதனால் மாநகராட்சிக்கு எவ்வித கொள்முதல் மற்றும் சுவிட்சுக்களுக்கான பராமரிப்பு செலவுகள் இல்லை.

எனவே, மண்டலம் 1–ல்(மேற்கு மண்டலம்) தெருவிளக்குகளை குறித்த நேரத்தில் மாலையில் ஒளிர விடவும் காலையில் அணைக்கவும் தெருவிளக்கு பராமரிப்பு தானியங்கி மின்சக்தி சேமிப்பு கருவிகளை நிறுவி அமல்படுத்தவும்,இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு (BOT) முறையில் டெண்டர் வரவழைத்து செயல்படுத்தவும் மாமன்றத்தின் ஒப்புதலைக்கோரும் ஆணையாளர் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.119**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**17) ம.பொ.4/001360/12**

மதுரை மாநகராட்சி மண்டலம் எண் : 2 (வடக்கு மண்டலம் ) தெருவிளக்கு மின்இணைப்பு சுவிட்சுகளை குறித்த நேரத்தில் மாலையில் தெருவிளக்குகளை ஒளிரவிடவும் காலையில் குறித்த நேரத்தில் தெருவிளக்குகளை அணைக்கவும், மின்சேமிப்பு செய்யும் தானியங்கி மின்சேமிப்பு கருவி மூலம் (Energy Saver GSM Technology ) அமைக்க மாமன்றத் தீர்மானம் எண்:292 நாள் : 03-3-2005 மற்றும் 504 / நாள் :25.01.2006 & 181 நாள் : 19.07.2006 ன் படி BOT முறையில் செய்து கொடுக்க M/s.சால்சர் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட் நிறுவனத்தாருக்கு வேலை உத்திரவு வழங்கி நடை முறைப்படுத்தப்பட்டு வருகிறது. இந்த General Monitoring System GSM technology method –ல் இயங்கும் வண்ணம் வடிவமைக்கப்பட்டு, நிறுவி கடந்த ஐந்து ஆண்டுகளாக இயங்கிவருகிறது. இதற்கான ஒப்ந்தம் செய்யப்பட்டு இத்திட்டம் வருகிற பிப்ரவரி/2012-ல் முடிவடைகிறது. இந்த Equipment (Automatic control system)–ஐ மேற்படி நிறுவனத்தார் தயாரித்து பொருத்தியுள்ளதால், இதற்கான spares மற்றும் பழுதுகளை சரி செய்வதற்கு, மாநகராட்சியில் அனுபவம் வாய்ந்த பணியாளர்கள் இல்லை, மேலும் இந்த Equipment ( Automatic control system )–ஐ மேற்படி நிறுவனத்தார் மட்டுமே சரி செய்ய இயலும்.

தற்போதைய 373Nos Switch –களில் உள்ள Equipment (Automatic control system) 373Nos சுவிட்சுகளையும் பராமரிக்க உத்தேசமாக செலவாகும் செலவினத்தொகை மதிப்பீடு தயார் செய்யப்பட்டதில் மாதம் ஒன்றுக்கு ரூ.165000/- ஆகும் .

மேலும், ஏற்கனவே M/s.சால்சர் எலக்ட்ரனிக்ஸ் லிமிடெட் நிறுவனத்தாருக்கும் மாநகராட்சிக்கும் ஏற்பட்டுள்ள ஒப்பந்ததில் மேற்படி BOT Method –ல் ஐந்து ஆண்டுகள் முடிந்த பிறகு மீண்டும் ஐந்து ஆண்டுகளுக்கு, வருடாந்திர பராமரிப்பு [AMC] செய்து கொடுப்பதற்கு மின்சேமிப்பில் 30% விகிதாசாரத்தில் வழுங்குவதற்கு ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது. இதன்படி கணக்கீடு செய்தால் மாதம் ஒன்றுக்கு உத்தேசமாக ரூ.119389/- மட்டுமே செலவாகும். இந்த பணிக்காக உத்தேசமாக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகையைவிட இந்த தொகை குறைவாக உள்ளது .

எனவே, M/s சால்சர் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட் நிறுவனத்தாருக்கும், மாநகராட்சிக்கும் ஏற்பட்டுள்ள ஒப்பந்தபடி, மண்டலம் 2 (வடக்கு) தெருவிளக்கு மின் இணைப்பு 373 Nos-ல் switch-களில் தானியங்கி மின்சேமிப்பு கருவிகளில் வருகின்ற மார்ச்/2012 முதல் ஐந்து ஆண்டுகளுக்கு வருடாந்திர பணி [AMC] செய்வதற்கு இதற்க்கான செலவினத் தொகைக்கு மேற்படி நிறுவனத்தார் மின்துய்ப்பில் சேமிக்கப்படும் மின்சேமிப்பில் 30% சதவீத விகிதாசாரத்தில தொகை வழங்குவதற்கும் இதற்காக M/s.சால்சர் எலக்ட்ரனிக்ஸ் லிமிடெட் நிறுவனத்தாருக்கும் வேலை உத்தரவு வழங்க மாமன்ற ஒப்புதலை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.120**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**18) ம.நி.4/36673/2001**

மதுரை மாநகராட்சி மைய நிர்வாகப்பிரிவு ஆணையாளார் அவர்களின் இல்லத்தில் பணிபுரிந்து வரும் இரண்டு TEXCO காவலர்களுக்கு ஆணையாளரின் 14.12.2011-ந் தேதிய உத்தரவின்படி 01.10.2011 முதல் 30.09.2012 வரை பணியாற்றுவதற்கும் TEXCO நிறுவனத்திற்கு கட்டணப்பட்டியல் வழி செய்யவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**குறிப்பு .**

இரண்டு காவலர்களுக்கான மாதக் கட்டணம் ரூ.7191x2=14,382/-(8 மணி நேர வேலை) + சர்வீஸ் சார்ஜ் 12% + சர்வீஸ் டாக்ஸ் 10.3%+ எஜிகேசன் செஸ் விற்பனை வரி 2%+ செகண்ட்ரி எஜிகேசன் செஸ் விற்பனை வரி 1% ஆக மொத்தம் ரூ.**17,767/-** ஆகும்.

**மாமன்றத்தீர்மானம் எண்.121**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**19) மநி 1/35175/2011**

மதுரை மாநகராட்சியின் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் Toyoto Quvalis Car TN 59V 7234 மற்றும் மரியாதைக்குரிய துணை மேயர் அவர்களின் Ambassador Diesel Car TN 59AA 9366 ஆகிய இரு வாகனங்கள் வாங்கி ஏழு ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டதாலும், வாகனங்கள் அடிக்கடி பழுதடைவதாலும், முக்கிய பிரமுகர்கள் வரும் சமயத்தில் விரைவில் செல்ல இயலாத காரணத்தினால் மேயர் மற்றும் துணை மேயர் அவர்களுக்கும் புதிய வாகனம் வாங்க உதவி செயற்பொறியாளரின் கருத்து குறிப்பு வரப்பெற்றுள்ளது.

வணக்கத்திற்குரிய மேயர் மற்றும் மரியாதைக்குரிய துணைமேயர் அவர்களுக்கு புதிய வாகனம் வாங்குவதற்கு DGS & D விலைவிகிதம் சேகரிக்கப்பட்டதில், வணக்கத்திற்குரிய மேயர் அவர்களுக்கு புதிய வாகனம் “Scorpio VLX AB” வாகனத்தின் DGS & D விலை மொத்தம் ரூ.11,26,241/- மற்றும், மரியாதைக்குரிய துணை மேயர் அவர்களுக்கு “**Ambassador Grand 2000 DSZ ”** வாகனத்தின் DGS & D விலை மொத்தம் ரூ.6,88,404/- ஆகிய விலைவிகிதத்தில் அரசின் அனுமதி பெற்று வாங்குவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.122**

**மரியாதைக்குரிய துணை மேயர் அவர்களுக்கும் Scrobio Car -வாங்குவதென குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**20) ம.பொ.7/ம.எண்.724/11-12**

மதுரை மாநகராட்சி, இரண்டாவது வைகை குடிநீர்த் திட்டப் பணிகள் அக்டோபர் மாதம் 2009-ல் முடிக்கப்பட்டு, ஏப்ரல் 2011 வரை M/s.பி அன்ட் சி கன்ஸ்டரக்சன் (பி) லிமிடெட் நிறுவனம் எண்.140, பெருந்துரை ரோடு, ஈரோடு அவர்கள் மூலம் ஒப்பந்த விதிகளின்படி பராமரிக்கப்பட்டது. 01.05.2011-ம் தேதி முதல் வைகை முதல் மற்றும் இரண்டாவது குடிநீர் திட்டங்கள் ஓராண்டிற்கு பராமரிக்கும் பொருட்டு ரூ.48.00 இலட்சங்களுக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு கடந்த 08.09.2011 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்கப்பட்டது. மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலைவிகிதம் M/s.பி அன்ட் சி கன்ஸ்டரக்சன் (பி) லிமிடெட் நிறுவனத்தார் 2010-11 மதிப்பீட்டுத் தொகையில் 17.48% அதிகமாக கோரியிருந்தனர். எனவே மேற்படி நிறுவனத்தாரிடம் விலைக்குறைப்பு செய்யக் கோரப்பட்டதன் பேரில் கோரப்பட்ட தொகையிலிருந்து 6.60% குறைத்து பணியை மேற்கொள்ள சம்மதக் கடிதம் அளித்துள்ளனர்.

மேற்படி விலைப்புள்ளி 2011-12 தர விலைப்படி கணக்கிடும் பொழுது, மதிப்பீட்டுத் தொகையை விட 1.30% குறைவாகவே உள்ளது. எனவே குடிநீர் பராமரிப்பின் முக்கியத்துவம் கருதி மேற்படி ஒப்பந்தக்காரருக்கு 2011-12 விலை விகிதப்படி 1.30% குறைவாக உள்ள விலை விகிதத்தினை ஏற்று M/s.பி அன்ட் சி நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புதல் செய்யவும், வேலை உத்திரவு வழங்கவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.123**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**21) ம.பொ.3/ 0001223/12**

மதுரை நகருக்குள் பலவகையான சரக்க வாகனங்கள் வந்து செல்கின்றன. மேற்கண்ட பலவகையான கனரக வாகனங்களை நகருக்குள் வெளியே நிறுத்தம் செய்து போக்குவரத்தை ஒழுங்குபடுத்தப்பட வேண்டும். இவ்வாறு மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் வாகனங்களை நிறுத்துவதற்கு கோச்சடை மற்றும் அவனியாபுரம் பகுதிகளில் Truck Terminal ஏற்படுத்தவும், மற்றும் நகருக்குள் வரும் சிற்றுந்துகளை திருவள்ளுவர் பேருந்து நிலையம் மற்றும் ஜான்சி ராணி பார்க் மேல்நிலைத்தொட்டி அருகிலும் நிறுத்தம் செய்வதற்காக பல அடுக்கள் கொண்ட வாகன நிறுத்தம் இடம் (Multy level car parking) அமைப்பதற்கும், தனியார் பேருந்துகளை நிறுத்துவதற்கும் ஒருங்கிணைந்த பேருந்து நிலையத்திற்கு அருகில் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் அமைப்பதற்கும் திட்ட ஆலோசகரை நியமிக்கவும், அதற்கான செலவீனத்தை நகர் ஊரமைப்பு துறையிடம் உள்ள திட்ட அபிவிருத்தி நிதியிலிருந்து பெற்று நடைமுறைபடுத்தவும். மாமன்ற ஒப்புதலைக் கோரும் ஆணையாளின் குறிப்பு

**மாமன்றத்தீர்மானம் எண்.124**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**22) ம.பொ.3/ 0001224/12**

அரசாணை நிலை எண்.220 நாள் 28.09.2010–ன்படி மதுரை மாநகராட்சியுடன் அருகாமையிலுள்ள நகராட்சிகள்–3 எண்ணம், பேரூராட்சிகள்–3 எண்ணம் மற்றும் ஊராட்சிகள் 11 எண்ணம் ஆகியவைகள் இணைக்கப்பட்டு ஒருங்கிணைந்த 100 வார்டுகள் கொண்ட மாநகராட்சியாக தற்போது செயல்பட்டு வருகிறது. இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு உட்கட்டமைப்பு மேம்பாடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட வருகிறது.

மக்களின் அத்தியாவாசிய தேவையான குடிநீர் வசதியை ஒருங்கிணைந்த மாநகராட்சிக்கு மேம்பாடு செய்வது அவசியமாகிறது. தற்போது ஒருங்கிணைந்த மதுரை மாநகராட்சியின் மக்கள் தொகை 15-இலட்சமாக உள்ளது. இன்னும் 30 வருடங்களுக்கு பிறகு மக்கள் தொனை சுமார் 30-இலட்சமாக கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. நகர் பகுதிகளுக்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு 135 லிட்டர் வழங்கப்பட வேண்டும் என்ற கோட்பாட்டின்படி தற்போது குடிநீர் தேவை நாள் ஒன்றுக்கு 203 மில்லியன் லிட்டர் எனவும் எதிர்காலத்தின் குடிநீர் தேவை நாள் ஒன்றுக்கு 405–மில்லியன் லிட்டராகவும் இருக்கும். ஆனால் தற்போது ஒருங்கிணைந்த மதுரை மாநகராட்சிக்கு தினந்தோறும் சுமார் 128.மில்லியன் லிட்டர் மட்டுமே குடிநீர் வழங்கும் நிலை உள்ளது. இதில் 115 மில்லியன் லிட்டர் வைகை அணையில் ஒதுக்கப்பட்ட 1500–மில்லியன் கனஅடி நீரிலிருந்து பெறப்பட்டும் மீதமுள்ளவை வைகை ஆற்றுப்படுகையில் அமைக்கப்பட்டுள்ள நீர் உறிஞ்சு கிணறுகள் மூலம் பெறப்படுகிறது. இப்போது கிடைக்கப்பெறும் குடிநீரின் அளவு, தற்போதைய குடிநீரின் தேவையை கூட சரிச்செய்ய முடியாத நிலையில் உள்ளது. ஒருங்கிணைந்த மதுரை மாநகராட்சிக்கு எதிர்கால குடிநீர் தேவைக்கு இன்னும் கூடுதலாக 278 மில்லியன் லிட்டர் (405-127) தேவைப்படும் நிலை உள்ளது. அல்லது தோராயமாக 3500 மில்லியன் கன அடி நீருக்கான குடிநீர் ஆதாரம் கண்டறியப்பட வேண்டியுள்ளது. எனவே, இதற்கான தகுந்த குடிநீர் ஆதாரத்தை தெரிவு செய்யவும், ஒருங்கிணைந்து மதுரை மாநகராட்சிக்கு குடிநீர் அபிவிருத்தி திட்டம் தயாரிப்பதற்கு தகுந்த ஆலோசகரை நியமிக்கவும், அதற்கான செலவீனத்தை நகர் ஊரமைப்பு துறையிடம் உள்ள 11 திட்ட அபிவிருத்தி நிதியிலிருந்து பெற்று நடைமுறைப்படுத்தவும் மாமன்ற ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.125</u>**

**<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது</u>**

**<u>23) ம.பொ. 3 / 001228 /2012</u>**

அரசாணை நிலை எண். 220, நாள் : 28.09.2010–ன் படி மதுரை மாநகராட்சியுடன் அருகாமையிலுள்ள நகராட்சிகள்–3 எண்ணம், பேரூராட்சிகள்–3 எண்ணம் மற்றும் ஊராட்சிகள் –11 எண்ணம் ஆகியவைகள் இணைக்கப்பட்டு ஒருகிணைந்த 100 வார்டுகள் கொண்ட மாநகராட்சியாக தற்போது செயல்பட்டு வருகிறது. புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு பல்வகை உட்கட்டமைப்பு மேம்பாடு செய்வதற்கு ஒருங்கிணைந்த மாநகர "நகர் அபிவிருத்தி திட்டம்" (City Development Plan) தயார் செய்யப்பட வேண்டியுள்ளது. மேற்படி திட்ட அறிக்கையை தகுந்த ஆலோசகரை நியமித்து தயாரிக்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.126</u>**

**<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது</u>**

**<u>24) ம.பொ.4/1227 /2012</u>**

மதுரை மாநகருக்குட்பட்ட பகுதிகளில் போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் பொருட்டு கோரிப்பாளையம் சந்திப்பு மற்றும் கட்டபொம்மன் சிலை சந்திப்பு (பெரியார் பேருந்து நிலையம் அருகில்) ஆகிய இரண்டு இடங்களில் மேம்பாலங்கள் (Fly Over) அமைப்பதற்கு தகுந்த திட்ட ஆலோசகரை நியமித்து ரூ. 75.00 கோடி மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய வேண்டியுள்ளது. மேற்படி திட்ட அறிக்கை தயாரிப்பதற்கு தேவையான நிதியினையும் திட்ட அறிக்கை தயாரித்து, மேற்குறிப்பிட்ட இடங்களில் போக்குவரத்து நெரிசலை தவிர்ப்பதற்கு மேம்பாலங்கள் கட்டுவதற்கு தேவைப்படும் நிதியினையும் நகர்ப்புற ஊரமைப்புத் திட்ட துறையின் அபிவிருத்தி நிதியிலிருந்து பெற்று பணிகளை மேற்கொள்ள மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.127</u>**

**<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது</u>**

**<u>25) ம.பொ. 1 / 001272/2012</u>**

மாநில அரசால் அறிவிக்கப்பட்ட "ஒருங்கிணைந்த நகர்புற மேம்பாட்டு திட்டம்" (Integrated Urban Development Mission)-த்தின் கீழ் மதுரை மாநகராட்சியில் உள்ள சாலைகளை சீரமைப்பதற்கு ரூ.83.14 கோடியில் திட்ட அறிக்கை தயாரிக்கபட்டு நகராட்சி நிர்வாக ஆணையருக்கு சமர்ப்பிக்கபட்டுள்ளது. இதன் முதல் கட்டமாக ரூ.15.00 கோடிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கு ரூ.40.13 கோடிக்கு திட்ட அறிக்கை தயாரிக்கபட்டு நகராட்சி நிர்வாக ஆணையருக்கு சமர்ப்பிக்கபட்டுள்ளது. இதன் முதல் கட்டமாக ரூ.10.00 கோடிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. தெருவிளக்குகள் அமைப்பதற்கு ரூ.15.00 கோடிக்கு திட்ட அறிக்கை தயாரிக்கபட்டு நகராட்சி நிர்வாக ஆணையருக்கு சமர்ப்பிக்கபட்டுள்ளது. இதன் முதல் கட்டமாக ரூ. 10.00 கோடிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி 3 திட்டங்களும் ரூ.138.27 கோடிக்கு தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டதில் முதற்கட்டமாக ரூ.35.00 கோடி வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகை 2012-13 நிதியாண்டில் "ஒருங்கிணைந்த நகர்புற மேம்பாட்டு திட்டம்" (Integrated Urban Development Mission)த்தின் கீழ் மதுரை மாநகராட்சியில் வழங்கப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி திட்டங்களுக்கு தற்போது ஒப்புதல் வழங்கியுள்ள ரூ.35.00 கோடி விலைப்புள்ளிகள் பெற்று மேல் நடவடிக்கை எடுக்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.128**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**26) ம.பொ.4/ம.எண். 206/2011-12**

மதுரை மாநகராட்சியில் இரண்டாவது வைகை குடிநீர் திட்டம் மற்றும் பாதாள சாக்கடை திட்டப் பணிகளுக்கென சாலைகள் தோண்டப்பட்டு மிகவும் சேதமடைந்து நிலையில் பொதுமக்கள் மற்றும் போக்குவரத்திற்கு மிகவும் இடையூறாக உள்ளதாக மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களிடமிருந்து மனுக்கள் வரப்பெற்றது. இம்மனுக்களின் அடிப்படையில் ஆணையாளர் அவர்கள் நேராய்வு மேற்கொண்டு மிகவும் சேதமடைந்த சாலைகளை சரி செய்ய முதற்கட்டமாக நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் உத்திரவின் பேரில் சாலைகளை சரி செய்யும் பொருட்டு தமிழ்நாடு நகர மேம்பாட்டு உட்கட்டமைப்புக் கழகத்திடமிருந்து (TURIP) நிதி ஒதுக்கீடு செய்து உத்திரவிடப்பட்டது. மேற்படி உத்தரவின் பேரில் ஒப்பந்தப்புள்ளி வரவழைக்க 30.11.2011 அன்று நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் (மாமன்ற தீர்மானம் எண். 75, நாள்.30.11.2011) ஒப்புதல் பெறப்பட்டு கடந்த 28.12.2011 அன்று ஒப்பந்தப்புள்ளி வரவழைக்கப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது. அதன் விபரம் பின்வருமாறு :

1) M/s. ஸ்ரீ காமாட்சி இன்ஜினியரிங் கான்ட்ராட்ஸ்
   எண். 6/373, மதுரை ரோடு, செக்காணுரணி, மதுரை.
2) திரு.S. ராமகிருஉ்ஷணன்
   எண். 7, ஸ்கூல் தெரு, பெத்தானியாபுரம், மதுரை.

நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் வழிகாட்டுதலின் படி, ஒப்பந்தப்புள்ளி தொழில்நுட்பக் குழுவின் முன்னிலையில் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டு தொழில் நுட்ப தகுதிகள் ஆய்வு செய்யப்பட்டது அதில் கீழ்கண்ட இரண்டு நிறுவனங்களும் தகுதியுள்ள நிறுவனங்கள் என அறிக்கை பெறப்பட்டதன் அடிப்படையில் இந்நிறுவனங்களின் விலைப்புள்ளி திறக்கப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு :

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. கோடியில்) | மதிப்பீட்டு விலை விகிதத்திலிருந்து கூடுதல் (சதவீதத்தில்) |
|---|---|---|---|
| 1. | M/s. ஸ்ரீ காமாட்சி இன்ஜினியரிங் கான்ட்ராட்ஸ் எண். 6/373, மதுரை ரோடு, செக்காணுரணி, மதுரை. | 355.43 | 3.77% |
| 2. | திரு.S. ராமகிருஉ்ஷணன் எண். 7, ஸ்கூல் தெரு, பெத்தானியாபுரம், மதுரை. | | 4.45% |

மேற்கண்ட ஒப்பீட்டுப் பட்டியலில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்தக்காராகிய M/s. ஸ்ரீ காமாட்சி இன்ஜினியரிங் கான்ட்ராட்ஸ் நிறுவனத்தின் விலை விகித்தினை ஏற்று வேலை உத்திரவு வழங்குவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.129**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**27) ம.பொ.7 / ம. எ .5 / 11-12**

மதுரை மாநகராட்சியில் ஆள்பற்றாக்குறையினை ஈடு செய்யும் பொருட்டு மதுரை மாநகராட்சிக்குத் தேவையான கனரக ஓட்டுனர்கள், இலகுரக ஓட்டுநர்கள், காவலர்கள், மின் கம்பியாளர்கள், கணினி உதவியாளர்கள், தொழில்நுட்ப உதவியாளர்கள் மற்றும் குடிநீர் பாதாள சாக்கடை பராமரிப்பு பணிகளுக்குத் தேவையான தேர்ச்சி திறனற்ற பணியாளர்கள் ஆகியோரை ஒப்பந்த அடிப்படையில் மாநகராட்சியின் நிபந்தனைகளை ஏற்று வெளிக்கொணர்வு முறையின்படி (Out Sourcing) ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்கள் சப்ளை செய்ய உரிய முறையில் ஒப்பந்தங்கள் கோர மாமன்ற தீர்மானம் எண் 1044 நாள் 9.2.2011-ன் படி ஒப்புதல் பெறப்பட்டு ஒப்பந்த புள்ளிகள் வரவழைக்கப்பட்டது.

வரப்பெற்ற ஒப்பந்த புள்ளிகளில் தொழில் நுட்ப தகுதி மற்றும் விலைவிபரம் ஒப்பீடு செய்யப்பட்டு குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள ஒப்பந்தகாரர்கள் விபரம் கீழே வகைப்படுத்தப்பட்டுள்ளது.

| வ. எண் | கோப்பு எண் மற்றும் பணியாளர்களின் தன்மை | பணியாளர்கள் பணிபுரியும் மண்டலம் | ஒப்பந்ததாரர்கள் விபரம் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | ம.பொ.7 / ம.எண் 7 / 11-12 காவலர்கள் (9 நபர்கள்) | மண்டலம் எண் 1 மேற்கு | M/S குவாலிட்டி சர்வீஸ் சொசைட்டி | மதிப்பீடு விலை விகிதம் |
| 2 | ம.பொ.7 / ம.எண் 8 / 11-12 தொழில்நுட்ப உதவியாளர்கள் (7 நபர்கள்) | மண்டலம் எண் 1 மேற்கு | M/S ஜெயம் இன்போடெக் | 9.09% குறைவு |
| 3 | ம.பொ.7 / ம.எண் 9 / 11-12 | மண்டலம் எண் 1 | M/S ஜெயம் | மதிப்பீடு விலை |

| | | | | |
|---|---|---|---|---|
| | தேர்ச்சி திறனற்ற பணியாளர்கள் (32 நபர்கள்) | மேற்கு | இன்போடெக் | விகிதம் |
| 4 | ம.பொ.7 / ம.எண் 15 / 11-12 மின் கம்பியாளர்கள் (5நபர்கள்) | மண்டலம் எண் 1 மேற்கு | M/S பொன் ராமர் லேபர் கான்ட்ராக்டர் | மதிப்பீடு விலை விகிதம் |
| 5 | ம.பொ.7 / ம.எண் 33A / 11-12 கனரக வாகன ஓட்டுனர்கள் (15 நபர்கள்) | மண்டலம் எண் 1 மேற்கு | M/S ஜெயம் இன்போடெக் | மதிப்பீடு விலை விகிதம் |
| 6 | ம.பொ.7 / ம.எண் 33B / 11-12 இலகுரக வாகன ஓட்டுனர்கள் (16 நபர்கள்) | மண்டலம் எண் 1 மேற்கு | M/S குவாலிட்டி சர்வீஸ் சொசைட்டி | 9.09% குறைவு |
| 7 | ம.பொ.7 / ம.எண் 3 / 11-12 தொழில்நுட்ப உதவியாளர்கள் (8 நபர்கள்) | மண்டலம் எண் 2 வடக்கு | M/S ஜெயம் இன்போடெக் | 9.09% குறைவு |
| 8 | ம.பொ.7 / ம.எண் 4 / 11-12 காவலர்கள் (22 நபர்கள்) | மண்டலம் எண் 2 வடக்கு | M/S குவாலிட்டி சர்வீஸ் சொசைட்டி | மதிப்பீடு விலை விகிதம் |
| 9 | ம.பொ.7 / ம.எண் 5 / 11-12 கணினி உதவியாளர்கள் (4 நபர்கள்) | மண்டலம் எண் 2 வடக்கு | M/S பொன் ராமர் லேபர் கான்ட்ராக்டர் | மதிப்பீடு விலை விகிதம் |
| 10 | ம.பொ.7 / ம.எண் 6 / 11-12 தேர்ச்சி திறனற்ற பணியாளர்கள் (48 நபர்கள்) | மண்டலம் எண் 2 வடக்கு | M/S ஜெயம் இன்போடெக் | மதிப்பீடு விலை விகிதம் |
| 11 | ம.பொ.7 / ம.எண் 13 / 11-12 மின் கம்பியாளர்கள் (15 நபர்கள்) | மண்டலம் எண் 2 வடக்கு | M/S பொன் ராமர் லேபர் கான்ட்ராக்டர் | மதிப்பீடு விலை விகிதம் |
| 12 | ம.பொ.7 / ம.எண் 30A / 11-12 கனரக வாகன ஓட்டுனர்கள் (45 நபர்கள்) | மண்டலம் எண் 2 வடக்கு | M/S ஜெயம் இன்போடெக் | 0.01% அதிகம் |
| 13 | ம.பொ.7 / ம.எண் 30B / 11-12 இலகுரக வாகன ஓட்டுனர்கள் (16 நபர்கள்) | மண்டலம் எண் 2 வடக்கு | M/S குவாலிட்டி சர்வீஸ் சொசைட்டி | 9.09% குறைவு |
| 14 | ம.பொ.7 / ம.எண் 32 / 11-12 தேர்ச்சி திறனற்ற பணியாளர்கள் (லாரி ஸ்டாண்டு) (12 நபர்கள்) | மண்டலம் எண் 2 வடக்கு | M/S குவாலிட்டி சர்வீஸ் சொசைட்டி | மதிப்பீடு விலை விகிதம் |
| 15 | ம.பொ.7 / ம.எண் 14 / 11-12 தெருவிளக்கு பராமரிப்பு உதவியாளர்கள் (5 நபர்கள்) | மண்டலம் எண் 3 கிழக்கு | M/S பொன் ராமர் லேபர் கான்ட்ராக்டர் | மதிப்பீடு விலை விகிதம் |
| 16 | ம.பொ.7 / ம.எண் 17 / 11-12 காவலர்கள் (8 நபர்கள்) | மண்டலம் எண் 3 கிழக்கு | M/S குவாலிட்டி சர்வீஸ் சொசைட்டி | மதிப்பீடு விலை விகிதம் |
| 17 | ம.பொ.7 / ம.எண் 18 / 11-12 தொழில்நுட்ப உதவியாளர்கள் (5 நபர்கள்) | மண்டலம் எண் 3 கிழக்கு | M/S ஜெயம் இன்போடெக் | 9.08% குறைவு |
| 18 | ம.பொ.7 / ம.எண் 20 / 11-12 தேர்ச்சி திறனற்ற பணியாளர்கள் (40 நபர்கள்) | மண்டலம் எண் 3 கிழக்கு | M/S ஜெயம் இன்போடெக் | மதிப்பீடு விலை விகிதம் |
| 19 | ம.பொ.7 / ம.எண் 34A / 11-12 கனரக வாகன ஓட்டுனர்கள் (17 நபர்கள்) | மண்டலம் எண் 3 கிழக்கு | M/S ஜெயம் இன்போடெக் | மதிப்பீடு விலை விகிதம் |
| 20 | ம.பொ.7 / ம.எண் 34B / 11-12 இலகுரக வாகன ஓட்டுனர்கள் (10 நபர்கள்) | மண்டலம் எண் 3 கிழக்கு | M/S குவாலிட்டி சர்வீஸ் சொசைட்டி | 9.09% குறைவு |
| 21 | ம.பொ.7 / ம.எண் 10 / 11-12 காவலர்கள் (9 நபர்கள்) | மண்டலம் எண் 4 தெற்கு | M/S குவாலிட்டி சர்வீஸ் சொசைட்டி | மதிப்பீடு விலை விகிதம் |
| 22 | ம.பொ.7 / ம.எண் 11 / 11-12 தேர்ச்சி திறனற்ற பணியாளர்கள் (38 நபர்கள்) | மண்டலம் எண் 4 தெற்கு | M/S ஜெயம் இன்போடெக் | மதிப்பீடு விலை விகிதம் |
| 23 | ம.பொ.7 / ம.எண் 12 / 11-12 தொழில்நுட்ப உதவியாளர்கள் (6 நபர்கள்) | மண்டலம் எண் 4 தெற்கு | M/S ஜெயம் இன்போடெக் | 9.09% குறைவு |
| 24 | ம.பொ.7 / ம.எண் 16 / 11-12 தெருவிளக்கு பராமரிப்பு உதவியாளர்கள் (7 நபர்கள்) | மண்டலம் எண் 4 தெற்கு | M/S பொன் ராமர் லேபர் கான்ட்ராக்டர் | மதிப்பீடு விலை விகிதம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 25 | ம.பொ.7 / ம.எண் 31A / 11-12 கனரக வாகன ஓட்டுனர்கள் (19 நபர்கள்) | மண்டலம் எண் 4 தெற்கு | M/S ஜெயம் இன்போடெக் | மதிப்பீடு விலை விகிதம் |
| 26 | ம.பொ.7 / ம.எண் 31B / 11-12 இலகுரக வாகன ஓட்டுனர்கள் (13 நபர்கள்) | மண்டலம் எண் 4 தெற்கு | M/S குவாலிட்டி சர்வீஸ் சொசைட்டி | 9.09% குறைவு |

மேற்கண்ட விபரப்படி குறைந்த விலைவிகிதம் கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்த புள்ளியை ஏற்று ஆணையாளர் ஒப்புதல் பெற்று வேலை உத்தரவு வழங்கப்பட்டது. மேற்கண்ட விபரப்படி ஒப்பந்ததாரர்களுக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டதற்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக்கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.130</u>**

**<u>நடப்பு நிதியாண்டு வரை மட்டும் பணி செய்ய குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது</u>**

**28)<u>Q1/18927/11-12</u>**

மதுரை மாநகராட்சியில் ஆள்பற்றாக்குறையினை ஈடு செய்யும் பொருட்டு மதுரை மாநகராட்சி மைய அலுவலகம் மற்றும் மண்டலங்களுக்குத் தேவையான, கணினி உதவியாளர்கள், ஒப்பந்த அடிப்படையில் மாநகராட்சியின் நிபந்தனைகளை ஏற்று வெளிக்கொணர்வு முறையின்படி (Out Sourcing) ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்கள் சப்ளை செய்ய உரிய முறையில் ஒப்பந்தங்கள் கோர மாமன்ற தீர்மானம் எண் :1044, நாள் :09.02.2011–ன்படி ஒப்புதல் பெறப்பட்டு ஒப்பந்தப் புள்ளிகள் வரவழைக்கப்பட்டது.

வரப்பெற்ற ஒப்பந்த புள்ளிகளில் தொழில்நுட்ப தகுதி மற்றும் விலைவிபரம் ஒப்பீடு செய்யப்பட்டு குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள ஒப்பந்தகாரர் விபரம் கீழே வகைப்படுத்தப்பட்டுள்ளது.

| வ. எண். | கோப்பு எண் மற்றும் பணியாளர்களின் தன்மை | பணியாளர்கள் பணிபுரியும் மண்டலம் | ஒப்பந்ததாரர்கள் விபரம் | மதிப்பீடு விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | Q1/18927/2011 கணினி உதவியாளர்கள் 34 நபர்கள் | அனைத்த மண்டலம் மற்றும் மைய அலுவலகம் | M/S.பொன் ராமர் லேபர் கான்ட்ராக்டர் | ரூ.235.68 பை நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு |

மேற்கண்ட விபரப்படி குறைந்த விலைவிகிதம் கொடுத்துள்ள ஒப்பந்ததாரின் ஒப்பந்த புள்ளியை ஏற்று ஆணையாளர் ஒப்புதல் பெற்று வேலை உத்தரவு வழங்கப்பட்டது. மேற்கண்ட விபரப்படி ஒப்பந்ததாரருக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டதற்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.131</u>**

**<u>நடப்பு நிதியாண்டு வரை மட்டும் பணி செய்ய குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது</u>**

**<u>29) B4/15702/12</u>**

